# மேன்மை மிகு நண்பர்

முகமது நபி தன் மரணத்திற்கு முன் செய்த துஆ:

'இறைவனே, என்னை மன்னித்து, என்மேல் இரக்கமாயிருந்து, மேன்மை மிகுந்த நண்பரிடம் என்னைச் சேர்த்தருளும்' (ஸாஹிக் புஹாரி 1753)

பின்பு முகமது நபி தன் கைகளை உயர்த்தி,

**'மேன்மை மிகுந்த நண்பரே'**

என்று சொல்லி தன் கைகளைக் கீழே போட்டார்.
(ஸாஹிக் புஹாரி 1574)

**அந்த மேன்மை மிகு நண்பர் யார்?**

ஸாஹிக் புஹாரி ஹதிஸின் கீழ்குறிப்பின்படி, அது தூதர்களாகவோ நபிமார்களாகவோ இருக்க வேண்டும். ஆனால், தூதர்கள் மேன்மைமிக்கவர்களாக குறிப்பிடப்படவில்லை. எனவே, முகமது நபியவர்களின் மேன்மை மிகு நண்பர் என்பது தூதனல்ல அது ஒரு நபியாகத் தான் இருக்கவேண்டும்.

**நபிமார்களில் மேன்மை மிகுந்த நண்பர் என அழைக் கப்படத்தக்கவர் யாராக இருக்கமுடியும்?**

ஆதம் —ஷபியுல்லாஹ் — இறைவனால் தூய்மையாக்கப்பட்டவர்

நூஹ் —நஜீயுல்லாஹ் — இறைவனால் பாதுகாக்கப்பட்டவர்

இப்றாஹீம் —கலீலுல்லாஹ் — இறைவனால் நேசிக்கப்பட்டவர்

இஸ்மாயில் —ஸபீயுல்லாஹ் — இறைவனால் பலியாக்கப்பட்டவர்

மூஸா —கலீமுல்லாஹ் — இறைவனால் கொடுக்கப்பட்டவர்

தாவூது —கலீபுல்லாஹ் — இறைவனால் நடத்தப்பட்டவர்
(மஜ்மு க்ஷரீப்)

எனினும் அவரே சொல்லியிருக்கிறார் . . ,

*'அனா அவ்லான் நாசி பி ஈஸாப்னி மர்யமா பித்—துன்யா வல் ஆகிரதீ வல் அம்பியாவு இக்வாத்துல்லி அலாத் தின் உம்மஹத்துஹுூம் ஸயாத்தா வா தீனுஹுூம் வாஹித்'*

'நான் இவ்வுலகிலும் மறுமையிலும் நான் மர்யமின் மகன் ஈஸாவுடன் நெருங்கியிருக்கிறேன். ஒரே இனமாகையால் எல்லா நபிமார்களும் இணைந்தே இருக்கிறார்கள். தாய்கள் வெவ்வேறாயினும் மார்க்கம் ஒன்றுதான் (ஹதீத் ஸாஹிக்புஹாரி 1501)

*'லிஸாப்னு மர்யமா வஜீஹன் பித்—துன்யா வல் ஆகிரதீ'*

' அவர் இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் மிகவும் கண்ணியமிக்கவராகவும் (இறைவனுக்கு) நெருங்கி யிருப்பவர்களில் ஒருவராகவும் இருப்பார் '
(குர் 3 அல் இம்ரான் 45)

*'வல்லாத்ஸி நப்ஸி பியாதிஹி லாயுஸிகன்னாஅயான் ஸிலா பிஹ்குமுப்னு மர்யமாஹகாமன் முஹ்ஸிதன்'*



' என் ஆந்மா அவரது கையில் இருக்கிறது, எனினும், மர்யமின் மகன் ஈஸா உங்கள் மத்தியில் இறங்கி வரும் காலம் அருகில் இருக்கிறது. அவரே நீதியுள்ள நீதிபதியாக இருப்பார் '
(ஹதீத் ஸாஹிக் புஹாரி 127)

*'லா மஹ்தியன் இலா ஈஸாப்னு மர்யம்'*

இமாம் மஹுூதி என்பவர் மரியாளின் மகன் ஈஸாவைத் தவிர வேறு யாருமில்லை.
(ஹதீத் இப்னு மாஜா)

ரூஹுூல்லாவாக (இறை ஆவியாக), ரஸுூலுல் லாவாக (இறைத் தூதுவராக) கலீமத்துல்லாவாக (இறை வார்த்தை) ஈஸா நபியவர்கள் இருக்கிறார் கள்.(அனாஸ் பின் மாலிக் 72, குர் 4 அந்நிஸா 171)

எனவே, மேன்மைமிகு நண்பர் என்பது இப்ன்மர்யம் எனப்படும் ஈஸா நபிகளைத் தவிர வேறுயாருமல்ல.

இறைவனால் அனுப்பட்ட மேன்மை மிகு நண்பர் சொல்வது என்னவென்றால்,

*;.வத்தாபி உன்னி ஹாத்ஸா ஸிராத்துல் முஸ்தகீம்;*
; . எனக்கு கீழ்படியுங்கள். . இதுவே நேர்வழி;
(குர் 43 அஸ் ஸுூக்ருப் 63,64)



*;வ லா தக்கோனோ காஅல்லாதினா குஆலோ ஸமி நா வாகும் லா யாஸ்மாவூன் இன்னா ஸியாராத் வாபிபி இந்தலஹிக்ஷ்—க்ஷுூம்—முல் புக்முல்—லத்ஸினாலா யாகுலுன்;*
'செவியேற்காமல் இருந்துகொண்டே,நாங்கள் செவியுற்றோம் என்று சொல்லுகின்றவர்களைப் போன்று நீங்கள் ஆகிவிடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் விடம் உயிர்ப் பிராணிகளில் மிகக் கேவலமானவர்கள் (உண்மையை) அறிந்து கொள்ளாச் செவிடர்களும் ஊமைகளும்தாம்'
(குர் 8 அல் அன்பாய் 21,22)

- எனவே, இங்கே கொடுக்கபட்டுள்ள இறை வசனங் களை கவனமாகப்பாருங்கள். உங்கள் வழியிலேயே உங்களை நல்வழிப்படுத்த அவர் தந்த வழிகாட்டும் கருவியாக எண்ணி அதைப் பின்பற்றுங்கள்.
- நேர்வழியைப் புறக்கணிக்கிற அக்கிரமக்காரர்களுக்கும் மதியீனருக்கும் இறைவன் ஏற்படுத்தியுள்ள அந்த இடத்திற்கு நம்மைநாமே ஏன் அனுமதிக்க வேண்டும்? எனவே மனந்திரும்புங்கள்
- இங்கேயே இறைவன் நமக்காக ஏற்படுத்தியுள்ள நேர்வழியில் செல்ல முயலுவோமாக.



**இந்த மேன்மைமிகு நண்பர்
நமக்கு இப்போது எவ்விதம் உதவுகிறார்?**

**1. மேன்மைமிகு நண்பரின் தெளிவான அடையாளங்கள் அவரது நேர்வழியை தெளிவுடன் வெளிப்படுத்துகின்றன.**

*;லா இக்றாபி அத்—தன் க்வாத் தபாய்யனா அர்—ரக்ஷ்த் மின் அல்—காயபா— மன் யாக்புர்பி— அத்—த்அகாத் வ யுமின் பி— அல்லா பா—க்வாத் இஸ்தாம்ஸாகா பி அல்—குர்வா அல—வத்கா லா இன்பிஸ்ஆம் லா. .;*

' ..மர்யமுடைய மகன் ஈஸாவுக்கு தெளிவான அத்தாட்சிகளை கொடுத்தோம்: இன்னும் ரூஹுூல் குதுஸி (எனும் பரிசுத்த ஆத்மாவைக்) கொண்டு அவருக்கு உதவிசெய்தோம்.. மார்க்கத்தில் எவ்வகையான நிற்பந்தமுமில்லை: சத்தியம் தவறானதை விட்டுப் பிரிந்து தெளிவாக நிற்கிறது .. '
(குர் 2 அல் பக்றா 253,256)

எனினும் நாம் நமது மார்க்கத்தில் இறைவனின் அற்புத வழிகளை விட்டுவிட்டு மனிதரின் வழிகளையே பின்பற்றி வந்திருக்கிறோம். முகமதுநபி புரிந்துகொண்டதை நாம் இழந்துவிட்டோம்.மேன்மை மிகு நண்பர் மூலமாக இறைவன் நமக்குத் தந்துள்ள தெளிவான அத்தாட்சிகள் நமக்கு அவசியம். இறைவேதத்தில் இல்லாத மற்ற வழிகளை நாம் புறக்கணித்து விட்டுவிடலாம்.

அவரது தெளிந்த அத்தாட்சிகள் சாத்தானின் கவர்ச்சிமிகு பொய்களை காட்டுகிறது.அந்த அடையாளங்கள் இறைவனின் மெய்வழியை நமக்கு வெளிப்படுத்துகின்றன. இறை வார்த்தையாகிய ஈஸாநபியவர்கள் மனிதப் பாரம்பரியங்களின் மாய்மாலத்தையும் அதன் வெறுமையையும் விளக்குகிறார்.

எனவே, ஈஸாவின் அத்தாட்சிகளுக்கு கீழ்படிந்து மற்ற வழிகளை விட்டுவிட்டவர்கள் இறைவனின் கிருபை நிறைந்த வழிநடத்துதலைப் பின்பற்றுவார்கள். அப்படிப்பட்டோர்தான் மரணத்திற்கோ நியாயத் தீர்ப்புக்கோ ஆயத்தமாக இருக்கிறார்கள்.

அவர்கள் மேன்மைமிகு நண்பரின் புனிதத் தன்மைக்குள் அடைக்கலமாக இருப்பதால் அவர்கள் மோட்சத்திற்குச் செல்வோம் என்கிற உறுதியான நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களது சொற்ப நற்செயல்களை அல்லது மனிதரின் வழிநடத்துதலை சார்ந்திராததால் அவர்கள் குற்ற மனசாட்சி நீங்கினவர்களாக இருக்கிறார்கள்.



இறை நம்பிக்கையாளர்களே, இறை வார்த்தையான ஈஸா நபியவர்களின் அத்தாட்சிகளை அறியாமலோ அல்லது தர்க்கித்தோ விட்டுவிடாமல் நம்பிக்கையுடன் நடந்துகொள்ளவும் நாம் நேர்வழியைக் கண்டடையவும் அவைகளுக்கு கீழ்படியுங்கள்.

**நாம் மற்ற வழிகளை நீக்கிவிட்டோமா?**

**இறைவனிடமிருந்து நமது மேன்மைமிகு நண்பர் தந்த அற்புத வார்த்தைகளால் நடத்தப்படுகிறோமா?**

**2.. நம்மிடம் வந்து நம்மைப் பாதுகாப்பாகப் பிடித்துச் சென்று நாம் நேர்வழியில் நடக்க மேன்மைமிகு நண்பர் நமக்கு உதவுகிறார்.**

நாம் தொட்டுப்பார்க்க முடியாத இறைவன், நம்பத்தகுந்த மிகவும் உன்னதமான தமது கரத்தை நீட்டி, மனித சாயலில் அற்புதமாக இவ்வுலகிற்கு வந்த ஈஸா நபியாகிய அவரது வார்த்தைமூலம் இவ்வுலகத்தில் நாம் அனுபவிப்பதற்கு ஏற்ப நம்மைப் பற்றிப் பிடிக்கிறார்!

*;லா இக்ரா பி அத்—தன் க்வாத் தபாய்யனா அர்—ரக்ஷ்த் மின் அல்—காயபா— மன் யாக்புர் பி—அத்—த் அகாத் வ யுமின் பி— அல்லா பா—க்வாத் இஸ்தாம்ஸாகா பி அல்—குர்வா அல—வத்கா லா இன்பிஸ்ஆம் லாஹா வா—அல்லாஹ் ஸமாக்காலிம்*



’எவர் அல்லாஹ்மீது நம்பிக்கை கொர்டிருக்கிறாரோ அவர் அறுந்துவிடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக்கொண்டார்’ (குர் 2 அல் பக்றா 256)

இங்கே 253ம் வசனத்தை நாம் கூர்ந்து கவனித்தால் இந்த பிரபலமான வசனத்தின் பொருளை அறியலாம். ஈஸாநபி மற்றுமுள்ள நபிமார்களின் அடையாளத்தை நாம் நம்பினால் நமக்கு பாதுகாப்பு உண்டு.

- இந்த பாதுகாப்பு இறைவனின் கரத்திலிருந்தே வருகிறது. இறைவனின் தூய ஆவியாக இருக்கிற ஈஸா நபியவர்களிடம் எவ்வித அசுத்தமும் இல்லை. பரிசுத்தமான அவர் மூலமாக மட்டுமே நாம் இறைவனிடம் தொடர்பு கொள்ளமுடியும். அவர் இறைவனின் ஆவியாக இருப்பதால் வியாதியுள்ளோரை மனதுருக்கமுடன் குணமாக்குகிறார்.
- ஏமாற்றம் நிறைந்த இவ்வுலகில் இறைவனிடமிருந்து வந்த உன்னத சத்தியமாகிய (அல் ஹக்) ஈஸா நபியவர்கள் மிகவும் நம்பத்தக்கவராக இருக்கிறார்.
- அவரது பாதுகாப்பு ஒருபோதும் அறுந்து போகாது. ஏனெனில், இவ்வுலகில் மனித சரீரத்தில் அவர் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப் பட்டும் சமாதானம் நிறைந்தவராயிருந்தார். அப்போது அவர் சொன்னது,



*;வஸ் ஸலாமு அலாய்ய யாஉமா வுலித்து வ யாவுமா அம்முது வ யாவுமா உமஸ்து ஹய்யன்;*

’ நான் பிறந்த நாளிலும் நான் மரிக்கும் நாளிலும் பின்பு உயிர்பெற்று எழும் நாளிலும் என்மீது சாந்தி இருக்கும்’ (குர் 19 மர்யம் 33)

**மிகவும் நம்பத்தக்க கரத்தின் பிடி ஒருபோதும் முறிந்து போகாது**

தூய இறைவன் வைத்துள்ள அற்புதமான அத்தாட்சிகளில் நாம் நம்பிக்கை வைத்தால் வாழ்விலும் மரணத்திலும் நமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கும்.

சூரா அல் இம்ரான் 55ம் வசனத்தில்,
நியாயத்தீர்ப்பின் அதிகாரியான இறைவன்,ஈஸாவை மரணத்திலிருந்து உயிர்ப்பித்து எழுப்பினார். ஈஸாநபி நறைவேற்றிய பலியின்மேல் நம்பிக்கை வைப்போர் மற்றவர்களை காட்டிலும் அதிகமான பலன் பெறும்படி செய்கிறார், இதை ஈஸாவுக்கு தெளிவுபடுத்தியுள்ளார். இறைவனுக்குச் சித்தமானால், ஈஸாவின் பலியின் மூலம் நாம் பாதுகாவல் தேடும்போது, அவரோடு அற்புதமாக நம்மை எழுப்பி அவருடனே கூட நம்மை அமரவும் செய்கிறார். அல்ஹம்துலில்லாஹ்!



முகமதுநபி தான் செய்துவந்த மார்க்க யுத்தத்தின் (ஜிகாத்) மேல் நம்பிக்கை வைக்காமல், மேன்மைமிகு நண்பர் இவ்வுலகில் விட்டுச்சென்ற பாதுகாவலுக்காகவே ஏங்கினார். நாமும் இவ்வழியை பின்பற்றி விசுவாசத்தோடு கெஞ்சவேண்டும்!

- அல்லாஹூம்ம ( ஓ, இறைவனே!)
- அஸ்தபிருல்லாஹ் (என் பாவங்களை மன்னித்தரு ளும்) என்னை காப்பாற்றிக்கொள்ள மற்ற வழிகளை புறக்கணிக்கிறேன். கியாமத்நாளில் என்னை காத்துக்கொள்ள ஈஸா நபியவர்களில் நீர் செய்த <u>உமது கொர்பான் அத்தாட்சியில்</u> நான் நம்பிக்கை வைக்கிறேன். <u>உமது வழியை</u> மட்டுமே நான் ஏற்றுக் கொள்கிறேன்.
- மேன்மை மிகு நண்பர் மூலமாக என்னைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளும்.

**இறைவனைப் பற்றும் நம்பகமான கரமும் மேன்மை மிகு நண்பருமான ஈஸா நபியவர்களின் தகர்க்க முடியாத வல்லமைக்குள் மிகுந்த பாதுகாப்பாக நாம் இருக்கிறோமா?**

மேன்மை மிகு இறைவன் தமது நேர்வழியின் வல்லமையால் நம்மைக் குணமாக்கி ஆசீர்வதிப்பாராக!

வஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வல் பரகாத்துஹு



## அல் ஸிராத்துல் முஸ்தகீம்

அஸ்ஸலாமு அலைக்கும்
வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு

M.I. 185 என்ற விமானத்தில் ஆண்கள் பெண்கள் சிறுவர் என சுமார் 104 பேர் 19 டிசம்பர் 1997 அன்று விடுமுறையைக் கழிக்க இந்தோனேசியா வின் தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து சிங்கப்பூருக்கு பயணித்த அவர்களில் ஒருவரும் அங்கே போய்ச் சேரமாட்டோம் என நினைத்துப் பார்த்ததில்லை. அந்த போயிங் 737 ரக விமானம் சடுதியில் நிலை தடுமாறி பாலம்பெங் மற்றும் முஸி நதிக்கு அருகில் விழுந்து நொறுங்கியதில் பயணிகள் மாண்டனர்.

மரண சக்தியின் வலிமையை கட்டுப்படுத்த இயலா மல், திடீர் மரணம், பூமிய திர்ச்சிகள், கடல்கொந்த ளிப்புகள், விபத்துக்கள் போன்றவற்றால் மிகப்பெரிய துயரங்களை மக்கள் சந்திக்கின்றனர். சிலர் கட்டுப் படுத்த இயலாத வியாதிகளில் மரிக்கின்றனர். நாம் எல்லாரும் மரணத்தை எதிர்நோக்கினாலும் அதை முன்னறிவிக்கவோ கட்டுப்படுத்தவோ இயலாது.

சிலர் நீண்ட காலம் வாழ நினைத்து புகை பிடிப்ப தைத் தவிர்த்து, உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி



களைச் செய்து ஆரோக்கியமான உணவை உட் கொண்டு உடலைப் பேணுகின்றனர். எனினும் நாம் ஒருநாள் மரிக்க நேரிடுவதைத் தடுக்கமுடியாது.

மற்ற சிலர் மரணத்தைப் பற்றி நினைப்பதேயில்லை: நல்ல உணவு, பணம், எதிர்காலம் பற்றிய கனவு கள் குடும்பத்தில் அமைதி சமுதாயத்தில் அந்தஸ்து இவை இருக்கும்போது மரணத்தைப்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. ஆனால், மரணம் வயதானவ ரையோ வியாதியுள்ளவரையோ மட்டும் சந்திப் பதில்லை, எச்சரிப்பு எதுவும் கொடுக்கமால் ஞானி களையும் இளைஞரையும்கூட மரணம் விழுங்குவ துண்டு. சமுதாயத்தில் உயர்ந்தவனும் தாழ்ந்தவனும் மரணத்தில் சமமாகிவிடுகின்றனர்.

அல்லாஹ் தனது நீதியின்படி மனிதரை சொர்கத் திற்கோ நரகத்திற்கோ அனுப்ப அதிகாரமுள்ளவர். அர்—ரஹ்மானிர்— ரஹீம் (மிகுந்த இரக்கமும் உருக்கமும் உள்ளவர்) என்பது அவரது பெயர். எனவே மரணமும் நியாயத்தீர்ப்பும் நம்முன் இருக் கிறது என்பதை எப்போதும் நினைவுபடுத்துகிறார். மரிக்கவும் பின்பு நியாயத்தீர்ப்படையவும் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. பூமியில் வாழ்ந்த வாழ்வுக் காக நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

எனவே,நாம் எப்போதுமே ஆயத்தமாயிருக்க இறை வன் விரும்புகிறார். இறைவன் ஒருவரே தரக்கூடிய சமாதானத்தைப் பெற்று ஸிராத்துல் முஸ்தகீம் என்று சொல்லப்படுகிற நேர்வழியில் நடப்பவர்கள் மட்டுமே இதற்கு எப்போதும் ஆயத்தமயிருக்கமுடியும்.



## இவ்வுலகம் தற்காலிகமானது

### இந்த வாழ்வின் நோக்கமென்ன?

உலகம் தற்காலிகமானது. இந்த வாழ்வும் உலகின் செல்வமும் காணாமல்போகும் புகையை போன்றது. ஆனால், என்றும் நிலைத்திருக்கிற இறைவனிடம் கொடுத்துவிட்டால், இவ்வுலகில் நம் வாழ்வு மாற்ற மடைந்து அழிவில்லாத நித்தியவாழ்வை பெறலாம்.

இவ்வுலக சந்தோஷத்திற்காகமட்டும் சிலர் வாழ்கின் றனர். தினமும் நாம் உலக காரியங்களில் மூழ்கிவி டுகிறோம். பணம் சம்பாதிக்க, வேலைக்குப்போக, சீக்கிரத்தில் அழிந்துவிடும் உலகக் கவர்ச்சிகளை அனுபவிக்க நாம் நாடுகிறோம். உணர்வைத் தூண் டும் இவையெல்லாம் சீக்கிரம் அழியக்கூடியதால் வாழ்வின் பொருளை நாம் இழந்துவிடுகிறோம். மாயையான இந்த சந்தோக்ஷங்களுக்காகப் போராட சாத்தான் நம் காதுகளில் ஊதுகிறான். நம்மை பாவத்தில் விழவைத்து நிரந்தரமாக நரகத்தின் குடிக ளாக்கி நம் வாழ்வை வீணாக்கிவிட விரும்புகிறான்.

நாம் அனுபவிக்கிற இன்பங்களை காட்டிலும் துன் பங்களே அதிகம்! நமது ஆத்துமாக்களின் உரிமை யாளரான இறைவனிடம் ஆர்வமுடன் திரும்பிவர மறந்துபோவதால், நாம் மிகவும் சோர்ந்துபோய் வாழ்வின் நோக்கத்தை இழந்து நிற்கிறோம்.

ஆனால் மெய்யான சந்தோக்ஷம் ஒன்று உண்டு என்பதையறிய இறைவன் நமக்கு எப்போதும் வழி



காட்டுகிறார். அவரது வழிகாட்டுதலை பின்பற்றும் போது, நம்மை நாமே இவ்வுலகில் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அவரது நேர்வழியில் (ஸிராத்துல் முஸ்தகீம்) அவரால் நாம் பரிசுத்தமாக்கப்பட்டு, பாவ மில்லாத அவரது மோட்சத்தின் குடிகளாக மாற்றப் படுகிறோம். மனிதனில் இருக்கும் ஆவிக்கு மறுமை வாழ்வில் (*ஆகிரத்தில்*) இரு எல்லைகளுண்டு. அது மோட்சம் நரகம் ஆகும். கியாமத்தில் (நியா யத்தீர்ப்பு நாளில்) நமது ஆவி நியாயந்தீர்க்கப்பட்டு இவைகளில் ஏதேனும் ஒன்றில் போய்ச்சேரும். அதிலிருந்து நாம் வெளி யேறவோ நமது இடத்தை மாற்றிக்கொள்ளவோ முடியாது. நிரந்தரமாக நாமங்கே இருக்கவேண்டும்.

நம்மில் ஒருவரும், எப்போது மரிப்போம் என நமக்குத் தெரியாததால், நமது மறுமையின் முடிவை இங்கேயே நாம் தேர்ந்தெடுக்கவேண்டும்.

***எவ்விதமான மறுமையை நீங்கள் தெரிந்தெடுக்கிறீர்கள்?***

### மோட்சம்

மோட்சம் மிகவும் அழகான, குளுமையான, இனிமை சூழ்ந்த, அமைதியும் மகத்துவமும் நிறைந்த நிரந்தரமாகத் தங்க, இளைப்பாறுவதற் கேற்ற அற்புதமான வனம்.

மோட்சத்தின் முழு அழகையும் நம் மனித சிந்தை யால் முற்றிலும் விவரித்துவிட முடியாது. இறைவ னிடமிருந்து இரட்சிப்பை பெற்றவர்கள் பாவத்தின்

14

சுமையிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள் என இறைவேதம் சொல்லுகிறது. துன்பத்தையும் புலம்ப லையும் நீக்கிப்போட்ட வலிமைநிறை இறைவனுக்கு புகழ் எழும்புகிறது,சந்தோஷம் மனிதரை நிரப்புகிறது.

இப்படிபட்ட சந்தோக்ஷத்தை பாவிகளான நாம் எப்படி அனுபவிக்கஇயலும்? இறைவனால் பரிசுத்தமாக் கப்பட்டபட்டோர் மட்டுமே இந்த அழகான மோட்சத் தினுள் போகமுடியும். ஈஸா நபியவர்களை மனித இனத்திற்கு இறைவனின் பரிசுத்த கொடையாக நியமித்திருப்பதாக அல் குர்ஆனில் சொல்லகிறது.

**அவரது அடையாளம் மனிதர்களுக்கு ஓர் அத்தாட்சியாகவும், நம்மிடமிருந்து ஒரு ரஹ்மத்தாக வும் (குர் 19 மர்யம் 19,21)**

வானத்திலும் பூமியிலும் ஈஸா நபியவர்களின் பெயரை வாக்குப்பண்ணப்பட்ட இமாம் மகுதியாக (அல்—மஸீஹ்),இம்மையிலும் மறுமையிலும் உயர்த் தப்பட்ட ஒருவராக இறைவன் நியமித்துள்ளார்.

**அவர் பெயர் மஸீஹ், அவர் இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் கண்ணியமிக்கவாரக இருப்பார்**
**(குர் 3 அல் இம்ரான் 45)**

15

## நரகம்

நரகம் என்பது வேதனைகள் நிறைந்த கொடிய இடம். இங்கிருப்போரின் ஆடையும் போர்வையும் படுக்கையும் நெருப்பாக இருப்பதால் அவர்கள் மிகவும் பாடுபடுவார்கள்.அவர்களது தலைக்குமேலே யும் பாதத்தின் கீழேயும் நெருப்பு சூழ்ந்திருக்கும். இவ்விடம் நெருப்பு கரும்புகை மற்றும் இருளாளல் நிறைந்திருக்கும். பெரும் துயரத்தினால் இங்குள் ளோரின் கண்கள் குருடாகி காதுகள் செவிடாகி வாய் முடங்கிப்போகும். பற்கடிப்பும் வேதனையும் கொடிதாயினும் இங்கே ஆந்மாக்கள் அழிந்துபோவ தில்லை, அவற்றுக்கு நம்பிக்கையும் விடுதலையும் இல்லை. இங்கே ஆத்துமாக்கள் மரண நிலையி லிருக்கும், இங்கு வேதனைக்கு முடிவேயில்லை.

முதல் மனிதனாகிய ஆதம் நபியிலிருந்து எல்லாரும் பிசாசினால் சோதனைக்குள் விழுந்துபோனோம். எல்லோரும் பாவிகளாகி நரகத்தின் பயங்கர வேத னையாகிய தண்டனையை தீர்ப்பாகப் பெறுகிறோம்.

’மேலும், அதனைக் கடக்காமல் உங்களில் யாரும் (போக) முடியாது: இது உம்முடைய இறைவனின் முடிவான தீர்மானமாகும்’
(குர் 19 மர்யம் 71)

16

## ஸிராத்துல் முஸ்தகீம்
### (மோட்சத்திற்கான நேர் வழி)

விசுவாசிகளுக்கு மட்டுமே இறைவன் மோட்சத் திற்கான ரேர்வழியை வெளிப்படுத்தியுள்ளார் என நாமெல்லாரும் அறிவோம். அத்துடன், இறை வணக்கத்தையும் அன்பின் கொடையையும் செய்து வரும் விசுவாசிகள் மட்டுமே இறுதிநாளில் மோட்ச பலனைப்பெறுவர் (குர் 4:162)

**ஆனால், நாம் இந்த வழியில் நடக்க இறைவன் எத்தனை பேருக்கு தெளிவான அத்தாட்சியை வெளிப்படுத்தியிருக்கிறார் என நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?** இறைவனிடமிருந்து தெளி வான அத்தாட்சி இல்லாமல் இந்த நேர் வழியைக் காண்பது எவ்வாறு?. இறை வெளிப்பாடு இல்லாவிட்டால், அவற்றை விசுவாசிப்பவர்கள் நாம் என அவருக்குள் தீர்மானிப்பது எப்படி?

**மோட்சத்தில் பிரவேசிக்கப் போதுமான காரியம் எதுவும் உண்டா?** நாம் அங்கு செல்வதற்குமுன் மதச் சட்டங்களை எவ்வளவுதூரம் பின்பற்ற வேண் டும்? மோட்சம் செல்லும் உறுதியைப்பெற நமது வேண்டுதலும் ஈகையும் எந்தளவு இருக்க வேண்டும்? மதத்தின் செயல்முறைப் போதனைகள் நமக்கு தெளிவான பதிலைத் தரவில்லை.

**எனினும், மோட்சத்திற்கான இந்த பாதை பற்றிய இறை வனின் கொள்கையை முற்றிலும் கடைப்பிடிப்பது நம்மில் எத்தனைபேர்?** மோட்சத் தினுள் செல்லத் தேவையான அன்பையும் கீழ்படித

17

லையும் பெற நம்மில் எத்தனைபேர் சக்தியும் அன்பும் விருப்பமும் கொண்டிருக்கிறோம்?

முடிவாக, விருப்பத்துடன் துஆ செய்தும் தர்மம் செய்தும் அநேகர் மன அழுத்தத்திலும் சந்தேகத் திலும், தயகத் திலுமே இருக்கிறன்றனர். நூற்றா ண்டு காலமாக, அவர் நமக்காக ஆயத்தப் படுத்தியுள்ள வழியைக் காண்பிக்கும்படி மனத் தாழ்மையோடும் மனந் திரும்புதலோடும் நாம் அவரிடம் வேண்டுதல் செய்ய வேண்டும்.

*;இஹ்தினாஸ் ஸிராத்துல் முஸ்தகீம்;*
**’நீ எங்களை நேர் வழியில் நடத்துவாயாக’**
(குர் 1 அல் பாத்திஹா 5)

*’யா அய்யுஹை லாட்சினா ஆமானுத் தகுல்லாஹா வப்தாஹூ இலைஹில் வஸீலாதா’*

‘மூமின்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங் கள்: அவன்பால் நெருங்குவதற்குரிய வழியை தேடிக் கொள்ளுங்கள்’ (குர் 5 அல்மாய்தா 35)

**இந்தப் பாதையை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?**

18

## அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமானவன்
## (அர் ரஹ்மாநிர் ரஹீம்)
### ( குர் 1 அல் பாத்திஹா )

இறைவன் அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாக இருப்பதால், நாம் மோட்சத் திற்குள் செல்ல நம்மை நினைத்து, அவரது வழி நடத்துதலை உறுதிப் படுத்தியிருக்கிறார். அல் குர்ஆன் அல் கரீம் மற்றும் அல் ஹதிஸ் இவற்றில் எழுதியிருப்பதை நாம் வாசிப்போம்.

**அல் குர்ஆன் அல் ஹதிஸ்**
**ஆகியவை காட்டும் வழிநடத்துதல்கள்:**

1. பின்பற்றத் தகுந்த நேர்வழி ஈஸா நபியவர்களே

*'வ இன்னஹு லாய்முலிஸ்ஸா அதிபா லா தம்தருன்னா பிஹாவத் தபி உன்னி ஹத்ஸா ஸிராத்துல் முஸ்தகீம்'*
நிச்சயமாக அவர்(ஈஸா) இறுதிக் காலத்திற்குரிய அத்தாட்சியாவார்: ஆகவே, நிச்சயமாக நீங்கள் இதில் சந்தேகப்படவேண்டாம்: மேலும், என்னையே பின்பற்றுங்கள்: இதுவே ஸிராத்துல் முஸ்தகீம் (நேரான வழி) (குர் 43 அஸ் ஸுக்ரூப் 61)

19

2. கீழ்படியத்தக்க வெளிச்சமாக ஈஸா இருக்கிறார்

*;வா லம்மா ஜா—ஆ ஈஸா பில் பையின்னதி குஆலா குஆத் ஜிதுகும் பில் ஹிக்மத்தி வா லி உபைனா லக்கும் பாதல் லத்ஸி ததாலிபுனா பிஹி பாத் தகுடடயஹா வா ஆத்திஹு;*
'ஈஸா தெளிவான அத்தாட்சிகளுடன் வந்தபோது: மெய்யாகவே நான் உங்களுக்கு ஞானத்தை கொண்டுவந்திருக்கிறேன்: நீங்கள் கருத்து வேற்று மையுடன் இருக்கும் சிலவற்றை உங்களுக்கு விளக்கிக் கூறுவேன். ஆகவே நீங்கள் அல்லாஹ் விடம் பயபக்தியுடன் இருங்கள்: எனக்கும் கீழ்படியுங்கள்'
(குர் 43 அஸ் ஸுக்ரூப் 63)

3. தர்க்கங்கள் நடுவிலும் ஈஸா சத்தியத்தை பேசினார்

*;ஸாலிக்கா ஈஸாப்னு மர்யமா கௌலுல் ஹக்கில் லாத்ஸி பிஹி யம்தாரூன்;*
'இ(த்தகைய)வர்தாம் மர்யமுடைய மகன் ஈஸா (ஆவார்):எதைக்குறித்து அவர்கள் சந்தேகம் கொண்டிருக்கிறார்களோ அதுபற்றிய உண்மையான சொல்(இதுவே யாகும்)' (குர் 19 மர்யம் 34)

20

4. ஈஸா நபியவர்கள் இறைத் தூதுவராகவும் இறை வார்த்தையாகவும் இருக்கிறார்

*;இன்னாமால் மஸீஹு ஈஸாப்னு மர்யமா ரஸீலூல்லாஹி வ கலிமத்துல்லாஹ்;*

' மர்யமுடைய மகனாகிய ஈஸா அல்லாஹ்வின் தூதராகவும் அவரது வார்த்தையாகவும் இருக்கிறார்
(குர் 4 அந் நிஸா 171)

5. இறை ஆவியாக, வார்த்தையாக இருக்கிறார்

'ஈஸா பா இன்னாஹு ராஹுல்லாஹு வ கலீமத்துஹு'
'ஈஸா இறைவனின் ஆவியாகவும் அவரது வார்த்தையாகவும் இருக்கிறார்'
(ஹதீத் அனாஸ் பின் மாலிக் பக்கம் 72)

6. ஈஸாநபியே இமாம் மகுதியாகவும் இருக்கிறார்

;லா மஹ்தியன் இல்லா ஈஸாப்னு மர்யம்: மரியாளின் மகனாகிய இயேசுவைத்தவிர இமாம் மகுதி யாருமல்ல. (இவர் முற்றிலும் பரிந்துபேசுகிற வழிகாட்டி);
(ஹதீத் இப்னு மாஜா)

21

7. ஈஸாநபி மனித சித்தத்தில் பிறக்காமல் இறை வனின் ஆவியினால் பிறந்தார்

*' வல்—லாத் அக்ஷ்க்ஷகனாத் பர்ஜஹா பா நபாக்கானா பிஹா மிர் முஹினா வாஜா அல் நாஹா வப்னாஹா ஆயத்தை இல் அலாமின்'*

'இன்னும் தன் கற்பைக் காத்துக்கொண்ட(மர்யம் என்ப) வரைப் பற்றி (நபியே! நினைவுகூரும்): எனினும், நம் ஆன்மாவிலிருந்து நாம் அவரில் ஊதி அவரையும் அவரது புதல்வரையும் அகிலத் தாருக்கு ஓர் அத்தாட்சியாகவும் ஆக்கினோம்'
(குர் 21 அல் அன்பியா 91)

8. ஈஸாநபி பிறந்து, மரித்து, உயிர்த்து எழுந்தார்

*;வஸ் ஸலாமு ஆலாயா யாஉமா வுலித்து வ யாஉமா அமூத்து வ யாஉமா உபஸ்து ஹய்யன்;*

' இன்னும் நாம் பிறந்த நாளிலும் நான் இறக்கும் நாளிலும் நான் உயிர்பெற்று எழும் நாளிலும் என் மீது சாந்தி நிலைத்திருக்கும்' (குர் 19 மர்யம் 33)

22

9. ஈஸா நபியவர்கள் மரித்து,மகிமைப்படுத்தப்பட் டார், அவரை பின்பற்றும் அவரது அடியார்கள் மற்றெல்லாருக்கும் மேல் உயர்த்தப்பட்டுள்ளனர்.

*'இஸ் காலல்லஹு யா ஈஸா இன்னி முத்தவபீக்க வா ரபீயூக்க இலாயா வ முத்தஹிருக்க மினல் லாஸின கபாமு, வ—ஜைலுலுல் லஸீன அத்தஉக பாகுல் லத்ஸின கபாமு இலா யாவ்மில் கியாமா'*
'ஈஸாவே நிச்சயமாக நான் உன்னைக் கைப்பற்று வேன்: இன்னும் என்னளவில் உம்மை உயர்த்திக் கொள்வேன்: நிராகரித்துக் கொண்டிருப்போருடைய (பொய்களில் நின்றும்) உம்மைத் தூய்மைப் படுத்து வேன்: மேலும் உம்மை பின்பற்றுவோரை கியாம நாள்வரை நிராகரிப்போருக்கு மேலாகவும்வைப்பேன்'
(குர் 3 அல் இம்ரான் 55)

10. ஈஸாநபி குக்ஷ்டரோகிகளை குணமாக்கி குருடருக்கு பார்வை கொடுத்தார்.

23

*'வ உப்ரியுல் அக்மஹா வல் அப்ரக்ஷா வ இஹில் மவுத்தா பி இஸ்னில்லாஹ்'*
'அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு பிறவிக் குருடர்களையும் குக்ஷ்டரோகிகளையும் குணப்படுத்து வேன், இறந் தோரையும் உயிர்ப்பிப்பேன்'
(குர் 3 அல்இம்ரான் 49)

11. ஈஸா நபியவர்கள் இறந்தோரை உயிர்ப்பித்தார்.

*'வ இஸ்த் துக்ன்ஜுல் மவுத்தா பி—இஸ்னி .. '*
'இறந்தோரை என் உத்தரவைக் கொண்டு நீர் உயிர்ப்பித்து கொண்டுவந்ததையும் நினைத்துப்பாரும்'
(குர் 5 அல் மாய்தா 110)

12. ஈஸா நபியவர்கள் அற்புதங்களைச் செய்து பரிசுத்த ஆவியைத் தந்தார்

*'வஆத்தாய்னா ஈஸாப்னு மர்யமா பாய்யினாதி வ ஆயாத் நாஹு பி ரூஹுல் குதுஸி'*
'மர்யமுடைய மகன் ஈஸாவுக்கு நாம் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்தோம் இன்னும் ரூஹுல் குதுஸி (என்னும் பரிசுத்த ஆத்மாவைக்) கொண்டு அவருக்கு உதவிசெய்தோம்'
(குர் 2 அல் பக்றா 253)

13. இறைவனின் ரஸுலாகிய ஈஸா நபியவர்களை புறக்கணிப்போரை புறஜாதிகள் என்றழைக்கிறார்.

*'வ பிக்குப்ரிஹிம் வ குவாலிஹிம் அலா மர்யமா பூஹ்தானன்'*
'இன்னும் அவர்களின் நிராகரிப்பின் காரணமாக வும், மர்யமின் மீது மாபெரும் அவதூறு கூறியதின் காரணமாகவும் (அவர்கள் சபிக்கப்பட்டனர்)'
(குர் 4 அந் நிஸா 156)

14. எல்லா ஜாதியரும் தங்களது நம்பிக்கையை ஈஸாவின்மேல் வைப்பார்கள்

*'வ அம் மின்கும் அலில் கிதாபி இல்லா லாயுமினன்னா பிஹி கப்லா மௌதிஹி வ யாவுமல் கியாமதி யாகூனு அலைஹிம் ஸாஹிதா'*
'வேதமுடையவர்களில் எவரும் தாம் இறக்குமுன்



அவர் (ஈஸா) மீது ஈமான் கொள்ளாமல் இருப்ப தில்லை: ஆனால் மறுமை நாளில் அவர் அவர்க ளுக்கு எதிராக சாட்சி சொல்பவராக இருப்பார்'
(குர் 4 அந் நிஸா 159)

15. தவ்றாத்தையும் (மூஸாவின் சட்டங்கள்) இன்ஜில் (நற்செய்தி)யையும் புறக்கணிப்போர் இறை மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் (காபிர்கள்) எனப்படுவர்.

*;குல் யா அஹ்லல் கிதாபி லஸ்தும் லாஸையி—ன்— ஹத்தா துகிமுத் தவ்றாதா வல் இன்ஜிலா வ மா உன்ஸிலா இலைக்கும் மிர் ருபிக்கும்;*
'வேதமுடையவர்களே நீங்கள் தவ்றாத்தையும், இன் ஜிலையும் இன்னும் உங்கள் இறைவனிடமிருந்து உங்கள்மீது இறக்கப்பட்டவற்றையும் நீங்கள் கடைப் பிடித்து நடக்கும் வரையிலும் நீங்கள் எதிலும் சேர்ந்தவர்களாகஇல்லை'(குர் 5 அல் மாய்தா 68)

16. இறை வார்த்தையான ஈஸாநபி இறைவனின் தூய சந்நிதியிலிருந்து வந்திருக்கிறார்.

*'வ இன்னாஹு ப்ஃளு உம்மில் கிதாபி லதைய்னா லா அலியுன் ஹகிம்'*



'இன்னும் நிச்சயமாக, இது நம்மிடத்தில் உள்ள உம்மில் கிதாபில்(தாய் நூலில்)இருக்கிறது.(இதுவே வேதங்களில்)மிக்கமேலானதும் ஞானம்மிக்கதுமாகும்'
(குர் 43 அஸ் ஸுக்ருப் 4)

17. ஈஸா நபியவர்கள் வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரமும் பெற்றிருக்கிறார்

*'இஸ்த் க்வாலதில் மலா—இக்கது யா மர்யமு இன்னல் லாஹ யுபஸிஸிருகி பிகாலிமாதிம் மின்ஹுஸ்முஹுல் மஸீஹு மர்யமா வஜீஹன் பித்—துன்யா வல்ஆகிரதி வ மினல் முக்குராப்பின்'*
'மலக்குகள் கூறினார்கள், மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிடமிருந்து வரும் ஒரு சொல்லைக் கொண்டு உனக்கு நன்மாராயங் கூறுகிறான். அதன் பெயர் மஸீஹ்: மர்யமின் மகன் ஈஸா என்பதாகும். அவர் இவ்வுலகிலும் மறுஉலகிலும் கண்ணிய மிக்கோராகவும் (இறைவனுக்கு) நெருங்கியிருப்பவர் களில் ஒருவராகவும் இருப்பார்'
(குர் 3 அல் இம்ரான் 45)

இறைவன் ஈஸாவுக்கு இம்மையிலும் மறுமையிலும் சகல அதிகாரமும் ஆளுகையும் கொடுத்திருக்கிறார். ஈஸாவே நேர்வழி. அவரைப் பின்பற்றியவர்கள் எல்லாருக்கும் மேலாக உயர்த்தப்படுவார்கள். *அல் குர்ஆனில் இறைவனுக்கு முக்கியமான ஈஸாவின் பெயர் 97 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.*



மோட்சம் அழகான அரண்மனை போன்றது. உயர் அதிகாரியான தேசத்தின் அதிபதி உங்களை தன் அரண்மனைக்கு அழைத்தால், நிச்சயமாக நீங்கள் அங்கே செல்வீர்கள்.

ஆனால், கீழ்மட்ட அதிகாரி ஒருவர் உங்களை அந்த அரண்மனைக்கு அழைத்தால் நிச்சயமாக அங்கே செல்லத் தயங்குவீர்கள். ஏனெனில், மிகுந்த பிரயாசப்பட்டு நீங்கள் அங்கு செல்லும்போது உயர்அதிகாரியினால் அனுமதி மறுக்கப்படலாம்.

அதிபதியாகிய இறைவன் தமது மிகுந்த இரக்கத் தினால், நம்மை மோட்சத்தில்சேர்க்க, மனித இனத் தின் அத்தாட்சியாக தமது ஆவியாக இருக்கிற ஈஸாவை நமக்காக நியமித்தார். இறைவனுக்கு மிக நெருங்கினவராகிய ஈஸா நமக்கு இந்த கிருபையின் அழைப்பைக் கொண்டு வந்திருக்கிறார். மோட்சத் திலுள்ள பாவமில்லாத மாசற்ற இறைவார்த்தையாக வந்துள்ளார். வெற்றியுள்ள அவர் இறைவனின் இரக்கத்தின் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி யுள்ளார்.அவரை ஏற்றுக்கொண்டு அவரது நேர்வழி யைப் பின்பற்றி இவ்வுலகில் நீதியின்படி வாழ்வோ ருக்கு உறுதியான மோட்சப் பிரவேசம் உண்டு.

இரு உலகிலும் மறுஉலகிலும் மேன்மைபெற்றுள்ள ஈஸாவின் ஆலோசனைப்படி நடப்போருக்கு மோட்ச பலன்களை வைத்திருப்பதாக இறைவன் கூறுகிறார்.

**Al-Mustaqim**
**c/o. Post Box No. 4, Madurai 625016 India**